மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்
முன்னிலை : திரு.சி. சிவக்குமார் , பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான்
2048 திருவள்ளுவராண்டு ஹேறவிளம்பி வருடம் தை மாதம் 12ம் நாள்
2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை
STC.01/2018

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்
வலங்கைமான் காவல் நிலையம்,
வலங்கைமான்..
குற்ற எண்.241/2017 .......குற்றமுறையீட்டாளர்

/ எதிர் /

தாரிக் இப்ராகிம் 30/17
த/பெ பரகத் தாகிர்,
மணிக்காரத்தெரு,
கும்பகோணம். ...எதிரி

இவ்வழக்கானது கடந்த 08.01.2018ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.01.2018ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. K. தண்டாயுதபாணி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று ( 25.01.2018) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

தீர்ப்புரை

கடந்த 20.10.2017 ம் தேதி மாலை 05.00 மணியளவில் வலங்கைமான் காவல் சரகம் நீடாமங்கலம் To கும்பகோணம் மெயின்ரோட்டில் சாட்சி 1 பாலாஜி என்பவர் தனது நண்பரான தாரிக்இப்ராகிம் அவர் படிக்கும் கோவில்வெண்ணி அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் அவரது பிறந்தநாளை கொண்டாட சென்றுவிட்டு திரும்ப தாரிக் இப்ராகிம் அவருக்கு சொந்தமான இருசக்கர வானம் புல்லட் TN 68 S 5526 என்ற எண்ணுள்ள வாகனத்தை தாரிக் இப்ராகிம் ஓட்ட பின்னால் சாட்சி 1 ஆன பாலாஜி உட்கார்ந்து வந்துகொண்டு இருக்கும்போது நீடாமங்கலம் To கும்பகோணம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக கீழ அமராவதி பாப்பாத்தி அம்மன் கோயில் அருகில் திருப்பத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய இவ்வழக்கின் எதிரியாகிய

நீா் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், உறாரன் அடிக்காமலும் ஓட்டிச் சென்று எதிரில் வந்த நான்கு சக்கர வாகனம் TN 68 S 0088 என்ற எண்ணுள்ள TATA ACE மீது பலமாக மோதி, சாட்சி1க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே எதிரியானவா் இதச பிரிவுகள் 279, 337, 338ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையீட்டாளா் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்த பின்னா் இ.த.ச.பிரிவுகள் 279, 337, 338ன் கீழான குற்றம்பற்றி வினவ எதிரி குற்றத்தை மறுத்தாா். தான் குற்றவாளி இல்லை எனவம், பொய்வழக்கு, என்றும், எதிா்வாதம் செய்வதாகவும் கூறினாா். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 8 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அவா்கள் வாயிலாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

(5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து அறியவரும் வழக்கின் சுருக்கம் பின்வருமாறு,

அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியை தெரியும் என்றும், கடந்த 2017ம் வருடம் தீபாவளி விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்தபோது தனது நண்பா் தாரிக் இப்ராஹிம் தனது கல்லூரியான கோவில்வெண்ணி அஞ்சலையம்மாள் கல்லூரியில் அவரது பிறந்த நாளை கொண்டாடுவதற்காக தன்னை அழைத்ததன்பேரில் கடந்த 20.10.2017ம் தேதி தான் தனது நண்பருடன் அவரது இருசக்கர வாகனமான TN 68 S 5526 என்ற பதிவெண் கொண்ட 350 CC வாகனத்தை தனது நண்பா் ஓட்ட தான் பின்னால் அமா்ந்து மதியம் புறப்பட்டு கல்லூரிக்கு சென்றுவிட்டு பின்பு அன்றைய தினம் மாலையே சுமாா் 5.00 மணியளவில் நீடாமங்கலம் டூ கும்பகோணம் மெயின் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன் கோவில் திருப்பத்தில் வந்தபோது தனது நண்பா் இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்ரதையாகவும், ஹாரன் எதுவும் அடிக்காமல் சென்று எதிரில் வந்த நான்கு சக்கர வாகனம் மீது வலப்பக்கமாக மோதிவிட்டதாகவும், அதில் தனது நண்பருக்கு இடது பக்க கை மற்றும் வலது

பக்க இடுப்பு, வலது கால் பாதத்தில் காயமும், தனக்கு வலது கால் தொடை, முட்டி, பாதத்தில் ரத்தக் காயம் ஏற்பட்டதாகவும், பிறகு தனது மாமா தகவல் அறிந்து வந்து தங்கள் இருவரையும் கும்பகோணம் சுகம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்ததாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது வலங்கைமான் போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1ஐ தெரியும் என்றும், எதிரியைத் தெரியும் என்றும், கடந்த 20.10.2017ம் தேதி அ.சா.1 பாலாஜி அவரது நண்பரான தாரிக் இப்ராஹிம் என்பவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக கோவில்வெண்ணி அஞ்சலையம்மாள் கல்லூரிக்கு அழைத்ததன்பேரில் அ.சா.1 பாலாஜி ஆஜர் எதிரியுடன் சென்றுவிட்டு அவரது நண்பரின் இருசக்கர வாகனமான TN 68 S 5526 என்ற பதிவெண் கொண்ட 350 CC வாகனத்தில் இருவரும் அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் நீடாமங்கலம் டூ கும்பகோணம் மெயின் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன் கோவில் திருப்பத்தில் வந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்ரதையாகவும், ஹாரன் எதுவும் அடிக்காமல் சென்று எதிரில் வந்த நான்கு சக்கர வாகனம் மீது வலப்பக்கமாக மோதிவிட்டதால் தனது அக்கா மகன் பாலாஜிக்கு வலது கால் தொடை, முட்டி, பாதத்தில் ரத்தக் காயம் ஏற்பட்டதாகவும், அவரது நண்பரான ஆஜர் எதிரிக்கும் இடது பக்க கை மற்றும் வலது பக்க இடுப்பு, வலது கால் பாதத்தில் காயம் ஏற்பட்டதாகவும், உடனே தனக்கு தொலைபேசி மூலம் தகவல் பெற்று சம்பவயிடம் சென்று இருவரையும் கும்பகோணம் சுகம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1, ஆஜர் எதிரியை தெரியும் என்றம், கடந்த 20.10.2017ம் தேதி தனக்குச் சொந்தமான TATA ACE TN 68 S 0088 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை தங்கள் தெருவைச் சேர்ந்த ரஞ்சன் என்கிற கோவிந்தராஜை அழைத்துக்கொண்டு வடக்கிலிருந்து தெற்காக ஆலங்குடி சென்றுகொண்டிருந்தபோது கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன் கோவில் அருகில் எதிர் திசையில் ஆஜர் எதிரி தனது இருசக்கர வாகனத்தை TN 68 S 5526 என்ற பதிவெண் கொண்ட 350 CC Bullet ஐ அதிவேகமாவும், அஜாக்ரதையாகவும், ஹாரன் எதுவும் அடிக்காமல் வந்து தனது வண்டியான டாடா ஏசின் மீது மோதியதில் புல்லட்டில் வந்த இருவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் தாங்கள்

அவர்களது உறவினருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 தனது சாட்சியத்தில் அ.சா.1, ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், கடந்த 20.10.2017ம் தேதி தான் தங்கள் தெருவைச் சேர்ந்த அய்யாபிள்ளை என்பவருடன் அவருக்கு சொந்தமான TATA ACE TN 68 S 0088 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்காக ஆலங்குடி சென்றுகொண்டிருந்தபோது எதிர் திசையில் கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன் கோவில் அருகில் நீடாமங்லகத்திலிருந்து வலங்கைமான் நோக்கி வந்த ஆஜர் எதிரி தனது இருசக்கர வாகனத்தை TN 68 S 5526 என்ற பதிவெண் கொண்ட 350 CC Bullet ஐ அதிவேகமாவும், அஜாக்ரதையாகவும், ஹாரன் எதுவும் அடிக்காமல் வந்து தாங்கள் சென்று கொண்டிருந்த வண்டியான டாடா ஏசின் மீது மோதியதில் புல்லட்டில் வந்த இருவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் தாங்கள் அவர்களது உறவினருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 23.10.2017ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் தானும் தங்கள் ஊரைச் சேர்ந்த காளிமுத்துவும் கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன்கோவில் அருகில் சென்று கொண்டிருந்த போது வலங்கைமான் போலீசார் கடந்த 20.10.2017ம் தேதியன்று நடந்த விபத்து சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் தானும் காளிமுத்துவும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 23.10.2017ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் தானும் தங்கள் ஊரைச் சேர்ந்த காளிமுத்துவும் கீழஅமராவதி பாப்பாத்தி அம்மன்கோவில் அருகில் சென்று கொண்டிருந்த போது வலங்கைமான் போலீசார் கடந்த 20.10.2017ம் தேதியன்று நடந்த விபத்து சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் தானும் காளிமுத்துவும் சாட்சியாக கையொப்பம் கையொப்பம் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 சிறப்பு உதவி ஆய்வளர் தனது சாட்சியத்தில் கடந்த 23.10.2017ம் தேதி வலங்கைமான் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் இருந்த கிடைத்த

தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாலாஜி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று 23.10.2017ம் தேதி காலை 9.30 மணிக்கு குற்ற எண்.241/2017 இதச பிரிவுகள் 279, 337 ன் வழக்கு பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகும் என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், தான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகும் என்றும், பின்னர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடிச்சென்று 26.10.2017ம் தேதியன்று காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்ததாகவும், மேலும் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை 26.10.2017ம் தேதியன்று கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியதாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், வலங்கைமான் காவல் நிலையக் குற்ற எண். 241/ 2017 இதச பிரிவுகள் 279, 337 வழக்கின் முதல் விசாரணை முடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு ராஜேந்திரன் தன்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அ.சா.1 க்கு சிகிச்சையளித்த கும்பகோணம் சுகம் மருத்துவமனை மருத்துவர் திரு. அன்பு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடமிருந்து அ.சா.1க்கு உண்டான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றதாகவும், அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5 ஆகும் என்றும், பின்னர் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வெங்கிடுசாமி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றதாகவும், எதிரிக்குண்டான வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும் என்றம், மருத்துவரின் காயச்சான்றிதழில் இருந்து அ.சா.1க்குண்டான காயம் கொடுங்காயம் என அறிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 ல் இருந்து இதச 279, 338 ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆகும் என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச 279, 338 பிரிவுகளின் கீழ் 06.12.2017ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

*6. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) -ன் கீழ் வினவ, எதிரி உண்மை வழக்கு எனவும், தனது தரப்பில் விசாரணை செய்திட சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார்.*

7.<u>தீர்வு</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி, ' எதிரி மீதான குற்றம் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?' என்பதே ஆகும்.

8. அரசுத் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1, முதல் அ.சா8 சாட்சிகள் மற்றும் அ.த.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.7 ஆவணங்கள் மூலமாக, எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்கிட வேண்டுமென்று வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி தன் மீதான குற்றத்தை தானே ஒப்புக் கொள்வதாகவும், எதிரி மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும், கூலிவேலை செய்து எதிரி குடும்பத்தை காப்பற்றி வருவதாகவும், குறைந்தபட்ச தண்டனை வழங்கிட வேண்டுமென்றும் வாதிட்டார்.

10. எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகளின் சாட்சியங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிரி கடந்த 20.10.2017 ம் தேதி மாலை 05.00 மணியளவில் வலங்கைமான் காவல் சரகம் நீடாமங்கலம் To கும்பகோணம் மெயின்ரோட்டில் சாட்சி 1 பாலாஜி என்பவர் தனது நண்பரான தாரிக்இப்ராகிம் அவர் படிக்கும் கோவில்வெண்ணி அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் அவரது பிறந்தநாளை கொண்டாட சென்றுவிட்டு திரும்ப தாரிக் இப்ராகிம் அவருக்கு சொந்தமான இருசக்கர வானம் புல்லட் TN 68 S 5526 என்ற எண்ணுள்ள வாகனத்தை தாரிக் இப்ராகிம் ஓட்ட பின்னால் சாட்சி 1 ஆன பாலாஜி உட்கார்ந்து வந்துகொண்டு இருக்கும்போது நீடாமங்கலம் To கும்பகோணம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக கீழ அமராவதி பாப்பாத்தி அம்மன் கோயில் அருகில் திருப்பத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய இவ்வழக்கின் எதிரியாகிய

நீர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், உறாரன் அடிக்காமலும் ஓட்டிச் சென்று எதிரில் வந்த நான்கு சக்கர வாகனம் TN 68 S 0088 என்ற எண்ணுள்ள TATA ACE மீது பலமாக மோதி, சாட்சி1க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

11. மேலும், எதிரி CrPC பிரிவு 313(i)(b) ன் கீழான விசாரணையிலும் குற்றத்தினை ஒப்புக்கொள்வதாக பதிலளித்துள்ளதையும் கருத்திற் கொண்டு எதிரியை குற்றவாளி என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12. முடிவில், எதிரியை இ.த.ச.பிரிவுகள் 279, 338-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரிக்கு இதச பிரிவு 279 ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.250/- விதித்தும் அதனை கட்டத் தவறினால் ஒரு வார கால மெய்காவல் சிறைத் தண்டனை விதித்தும், இதச பிரிவு 338ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.500/= விதித்தும் அதனை கட்டத்தவறினால் 2 வார கால மெய்க்காவல் தண்டனை விதித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(2)-ன்கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

( மொத்த அபராதத் தொகை ரூ.750/= )

13. இவ்வழக்கில் தடயப் பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்து இன்று 2018-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 -ம் நாளாகிய இன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/= சி. சிவக்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

அரசுத்தரப்பு சாட்சிகள் :-

| | |
|---|---|
| அ.சா.1 | பாலாஜி, புகார்தாரர் |
| அ.சா.2 | முத்து |
| அ.சா.3 | அய்யாபிள்ளை |
| அ.சா.4 | ரஞ்சன் |

| | |
|---|---|
| அ.சா.5 | காளிமுத்து |
| அ.சா.6 | சேகர் |
| அ.சா.7 | ராஜேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.8 | ஓவியா, உதவி ஆய்வாளர். |

2. அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.10.2017 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 23.10.2017 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 23.10.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 23.10.2017 | மாதிரி வரைடம் |
| அ.சா.ஆ.5 | 21.11.2017 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | 27.10.2017 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (எதிரி) |
| அ.சா.ஆ7 | = | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

3. எதிரிதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் = _இல்லை.

4. சான்று பொருள் = _இல்லை.

ஒம்/= சி. சிவக்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

// உண்மை நகல் //

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர்